## NEWSPAPER CLIPPINGS

| | | | |
|---|---|---|---|
| MEDIA | NAM NAADU | DATE | 23 OCT 2013 (TUES) |
| PAGE / SECTION | 1 & 3 / HEADLINES | READERSHIP | 45,000 |



# தாதியர்களுக்குப் பொறுமையும்-புன்னகையும் அவசிய

வெற்றிவிக்டர் / விகடகவி

சுபாங்: நேற்று சுபாங்கிலுள்ள தங்கும் விடுதியில் பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் ஏற்பாட்டில் நடைபெற்ற பாராட்டு விழாவில், சிலாங்கூரில் அமைப்புகளைப்போல் செயலாற்றிவரும் மூன்று மருத்துவ மையங்களில் பணிபுரியும் 300 தாதியர்களில், சிறுநீரகச் செயலிழப்பு நோயாளிகளுக்குப் பல ஆண்டுகாலமாகச் சிறந்த சேவையை வழங்கிவரும் 5 தாதியர்கள் இக்கிளப்பால் சிறப்பிக்கப்பட்டனர்.

தேசிய சிறுநீரக அறவாரியம், மலேசிய சென். ஜோன் அம்புலன்ஸ் மற்றும் எம்.ஏ.ஏ. மெடிக்கேர்-ல் பணிபுரியும் 300 தாதியர்களில், இவ்வாண்டின் சிறந்த தாதியர்களாக ஐவர் சிறப்பிக்கப்பட்டனர். சிறப்பிக்கப்பட்ட ஐவரில் ஒரே இந்தியப் பெண் சுமதி சுப்ரமணியம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் ஏற்பாட்டாளரும், ரோட்டரி கிளப்பின் தலைவருமான கேப்டன் எச்.எஸ்.தரன் கூறுகையில், "2011 - 2012-ல் நாடு தழுவிய நிலையில் சிறுநீரகச் செயலிழப்பினால் சுமார் 25,688 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் அல்லது நோயாளிகளைக்




கவனித்துக்கொள்ளும் தாதியர்களின் எண்ணிக்கையோ குறைவு. அந்தவகையில், இந்த மூன்று அமைப்புகளைச் சேர்ந்த தாதியர்களில் சிறுநீரகச் செயலிழப்பு நோயாளிகளுக்கு நீண்டகாலச் சேவையையும், சிறந்த சேவையையும் வழங்கும் தாதியர்களைத் தேர்வு செய்து அவர்களது சேவையை அங்கீகரிக்கவும், கௌரவிக்கவும் வேண்டும் என்பதே ரோட்டரி கிளப்பின் எண்ணம்.

அந்தவகையில், பெட்டாலிங் ஜெயா தேசிய நீரிழிவு அறவாரியத்தின் சிகிச்சை மையத்தைச் சேர்ந்த சித்தி பாத்திமா, டாமன்சாரா சிகிச்சை மையத்தைச் சேர்ந்த ரோஸ்மா, பந்திங் சென் ஜோன் சிகிச்சை மையத்தைச் சேர்ந்த சுமதி, ரவாங் சென் ஜோன் சிகிச்சை மையத்தைச் சேர்ந்த ஹஸ்லினா மற்றும் காஜாங் எம்.ஏ.ஏ. மெடிகேர்-ரைச் சேர்ந்த சித்தி ஸமிடா ஆகிய 5 தாதியர்கள் ரோட்டரி கிளப்பால் சிறந்த தாதியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு, அவர்கள் அனைவரும் நேற்று கௌரவிக்கப்பட்டது மட்டுமல்லாமல், அவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் நற்சான்றிதழும், ஒரு நவீன கேமராவும் பரிசாக வழங்கப்பட்டது என எச்.எஸ்.தரன் தெரிவித்தார்.

இதனிடையே, நற்சான்றிதழைப் பெற்றவர்கள் ஒருவரான சுமதி சுப்ரமணியம் (31 வயது) கூறுகை "நான் இறுதிவரை ஒரு தாதியாகப் பணியாற்ற விரும்புகிறேன். காரணம், இதில் எனக்கு ஆத்மதி கிடைக்கிறது. என்னைப் போன்ற தாதியர்களுக் பலமே பொறுமையும், புன்னகையும்தான். காரணம், வலியில் அவஸ்தைப்படும் நோயாளிகள் எரிச்சலாகவும், கோபத்துடனும் பேசினால் தாதியர்களாகிய நாங்கள் அவர்களது சூழ்நிலை புரிந்துகொண்டு பொறுமையாக அவர்களின் பிரச்னைகளைக் கையாளவும், பொறுமையாக அவர்களிடம் அணுகவும் வேண்டும். ஒரு நோயாளியைக் கவலையில்லாமல், பயமில்லாமல் தைரியப்படுத்தத் தாதியர்கள் எப்போதும் புன்னகையுடன் அவர்களை அணுகி, தைரியத்தை அவர்களுக்கு ஊட்டினாலே நோயாளிகளுக்குப் ப தெம்பும், புத்துணர்ச்சியும், நம்பிக்கையும் வந்துவி இன்று எனக்குக் கிடைத்த இந்த நற்சான்றிதழை பாராட்டுகளையும் ஓர் ஊட்டச்சத்தாகவே நான் கருதுகிறேன் எனத் தெரிவித்தார்."